மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : தொழிற் சங்கத் தலைவர் அவர்களுடைய ஒத்துழைப்பிற்கு நன்றி தெரிவித்து, பாராட்டையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நம் தொழிற் சங்கத் தலைவர் அவர்கள் போக்குவரத்துத்துறையில் உள்ள தம் நண்பர்களுக்குச் சொல்லி நல்ல முறையில் பணியாற்றி அரசாங்கத்திற்கு வருமானத்தை, லாபத்தை அதிகரிக்கச் செய்தால், அவர் சொன்ன கருத்தை நிச்சயமாகப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Omni Bus

*36. Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the Government are aware of the fact that buses are plying with passengers daily from Madras to Tiruchy and from Madras to Salem, with the name board "On Contract" or "Omni Bus"; and

(*b*) if so, the action taken thereon ?

ஒப்பந்த ஊர்தி

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஒப்பந்த ஊர்தி (on contract or Omni Bus) என்ற பலகையுடன் தினசரி திருச்சி—சென்னை, சென்னை—சேலம் ஆகிய நகரங்களுக்கு பிரயாணிகளை பேருந்துகள் ஏற்றிச் செல்வதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) திருச்சி—சென்னை, சேலம்—சென்னை வழித் தடங்களில் ஒப்பந்த அடிப்படையில் ஆம்னி பஸ் பேருந்துகள் விடப்படுவதை அரசு அறியும்.

(இ) இந்த ஆம்னி பஸ்கள் பேருந்துப் போக்குவரத்துத் துறை அதிகாரிகளால் சோதனையிடப்படுகிறது. பயணிகள் தாங்கள் செய்யும் பயணத்துக்காகத் தனியே கட்டணங்களைச் செலுத்துகின்றனர் என்றோ ஒப்பந்தத்தில் சேர்க்கப்படாத பயணிகளை வழிகளில் பேருந்துப் பணியாளர்கள் ஏற்றிக் கொள்கின்றனர் அல்லது இறக்கி விடுகின்றனர் என்றோ எண்பிக்கப்பட்டால் வரையறுக்கப்பட்ட நடைமுறையை யொட்டி சம்பந்தப்பட்ட வண்டிகளின் உரிமங்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பி. திருஞானசம்பந்தம் : தலைவர் அவர்களே, ரெகுலர் தனியார் கம்பெனிகள் பஸ் விடுவதுபோல இப்போது ஒப்பந்த ஊர்திகள் அதிகமாக ஓடுகின்றன. சமீபத்தில்கூட மானமதுரை—சென்னை என்று ஒரு பஸ் கம்பெனி பாண்டியன் சர்வீஸ் என்ற பெயரில் பத்திரிகையில் பகிரங்கமாக விளம்பரப்படுத்துகிறார்கள். ஆகவே இவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து அதைத் தடுப்பதற்கு அரசு முன்வருமா ?

[2nd December 1970

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : நடவடிக்கை எடுக்கப் படுகிறது. அனுபவம் என்னவென்றல்,

Experience has shown that in many cases passengers declare themselves to be covered under the contract. They are reluctant to give a statement to establish the breach of permit conditions.

பயணம் செய்கிற பயணிகள் உண்மை நிலவரத்தைப் பற்றிய ஸ்டேட் மெண்ட் கொடுக்க முன்வராத காரணத்தால்தான், இதுபோன்ற தவறுகள் நடக்கும்போது சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக்கிறது. இருந்தாலும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த பஸ்களுக்குக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறோம். இந்தத் தவறுகளைக் குறைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எஸ். ராகவானந்தம் : அப்படி என்றல் சி.ஐ.டீக்களையே பிரயாணிகளாக அனுப்பி அவர்களிடமிருந்து ரிபோர்ட் வாங்கி தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களையே சி.ஐ.டியாக எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

Tamil Nadu State Transport Department

*37. Q.—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether there is any proposal to decentralise the administration of the Tamil Nadu State Transport Department ; and

(*b*) if so, the details thereof ?

தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துத் துறை

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துத் துறையின் நிர்வாகத்தைப் பரவலாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) வும் (இ) யும் : பேரவைமுன் விவர அறிக்கை† ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

† Printed as Appendix II